# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.வி.மு.தொ.பிரிவு 154-இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069092

1. District : Salem
மாவட்டம்
PS: V4AC
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 4/AC/2024
மு.த.அ. எண்
Date: 10.7.2024
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் — Date to : நாள் வரை (1) 09.07.2024 at 14.00hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை (2) 09.07.2024 at 17.00hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.07.2024
Time நேரம் 06.30hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.07.2024
Time நேரம் 07.30hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25km South east direction

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Thumbalpatti V.A.O. Office

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Aravinth
(b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Kumar @ Sivakumar
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Coolie
(g) Address : முகவரி D.No. 352/1, Parayan Metukadu, Jalluthupatti, Kammalapatti, Salem Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Balammal, V.A.O, Thumbal patti group village, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............................................: காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 10.07.2024

[signature] 10.7.2024.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. D. RAVI KUMAR

Rank: நிலை ...................... No. எண் ..........
Inspector of Police
VtAC, Salem

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.7.2024 at 8.45hrs.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/AC/2024 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண் 12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>: சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆர்.டி.ரவிகுமார் ஆகிய நான் இன்று 10.07.2024 ந் தேதி காலை 06.30 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்டம், கம்மாளப்பட்டி, ஜல்லூத்துப்பட்டி, 352/1, பறையன் மேடுக்காடு என்ற முகவரியில் குமார் (எ) சிவக்குமார் மகன் திரு.K.அரவிந்த் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு. *அனுப்புதல், K.அரவிந்த், வயது 22, த/பெ. குமார் (எ) சிவக்குமார், 352/1, பறையன் மேட்டுக்காடு, ஜல்லூத்துப்பட்டி, கம்மாளப்பட்டி, சேலம் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, சேலம். அய்யா, நான் சேலம் மாவட்டம், கம்மாளப்பட்டி, ஜல்லூத்துப்பட்டியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா குமார் 2004ம் ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். எனது அம்மா இந்திராணி கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு ஒரு அண்ணன் உள்ளார். அவர் பெயர் அஜீத்குமார். நானும், அவரும் கட்டிட கூலி வேலை செய்து வருகிறோம். எங்களின் தாத்தா சடையன் (எ) செல்லக்கவுண்டர் பெயரில் ஜல்லூத்துப்பட்டி வருவாய் கிராமத்தில் சர்வே எண்.50/3ல் 1.98 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அந்த விவசாய நிலத்தில் 2023 ஆம் ஆண்டு எனது தாத்தா, எனது பெயருக்கும், எனது அண்ணன் அஜீத்குமார் பெயருக்கும் 1 ஏக்கர் நிலத்தை பிரித்து தான செட்டில்மெண்ட் மூலம் தாதகாப்பட்டி பத்திர பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.5595/2023ஆக பதிவு செய்து கொடுத்திருந்தார். அதனால் எனது பெயருக்கும், எனது அண்ணன் அஜீத்குமார் பெயருக்கும் தனியாக பட்டா வாங்கிக்கொள்ள முடிவு செய்து, கடந்த 04.06.2024 ந் தேதி தனிபட்டா வேண்டி விண்ணப்பித்திருந்தேன். அதன் மனு எண்.2024/0105/08/507028 என்பதாகும். அது சம்மந்தமாக கடந்த 06.07.2024ந் தேதியும், 08.07.2024 ந் தேதியும் தும்பல்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. பாலம்மாள் அவர்கள் அவரது செல்போன் எண்.8248773148 இருந்து எனது செல்போன் எண்.9025978303 எண்ணிற்கு அழைத்து எங்களது தானசெட்டில்மெண்ட் தொடர்பான ஆவணங்கள் மற்றும் அப்பாவின் இறப்பு சான்றிதழ் ஆகியவைகளை கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார். அதனால் 09.07.2024ம் தேதி காலை சுமார் 11.00*

மணியளவில் நானும் எனது அண்ணன் அஜீத்குமாரும் தும்பல்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றோம். அப்போது அவர் வெளியில் சென்றிருப்பதாக தகவல் தெரிந்ததால் மீண்டும் அவரைப் பார்க்க மதியம் சுமார் 2.00 மணியளவில் நேரில் சென்று திருமதி. பாலம்மாள் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவர்கேட்டிருந்த ஆவணங்களை கொடுத்தோம். அதை படித்து பார்த்த அவர் எங்களுக்கு முதலில் கூட்டு பட்டாவாக கொடுத்துவிட்டுதான் பின்னர் தனிபட்டாவாக வழங்க முடியும் என்று தெரிவித்தார். அதற்கு ஒரு ஆளுக்கு ரூ.10,000ம் வீதம் மொத்தம் ரூபாய் 20,000/– தனக்கு தனியாக கொடுத்துவிடுங்கள் என்றும், தான் பட்டாவிற்கான வேலையை விரைவில் முடித்து தருவதாகவும் தெரிவித்தார். அதற்கு தற்போது எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி விட்டு நாங்கள் வந்துவிட்டோம். மீண்டும் அன்றையதினமே மாலை சுமார் 5.00 மணியளவில் நானும், எனது அண்ணன் அஜித்குமாரும் தும்பல்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பாலம்மாள் அவர்களை நேரில் சந்தித்து கூட்டு பட்டா குறித்து கேட்டோம். அதற்கு அவர், தான் உங்களிடம் ஏற்கனவே தெரிவித்ததுபோல் ரூபாய் 20,000/–ம் கொடுத்துவிடுங்கள், உடனே பட்டா வழங்க ஏற்பாடு செய்து தருவதாகவும், இல்லை என்றால் என்னிடம் வராதீர்கள் என்று கண்டிப்புடன் தெரிவித்தார். அதற்கு நான் அதிகமாக கேட்கிறீங்களே என்றேன். அதற்கு அவர் சரி போயிட்டுபோது இரண்டு பேருக்கும் சேர்ந்து ரூபாய் 15,000/– கொடுத்து பட்டா வேலையை முடிச்சுக்கோங்க என்று தெரிவித்தார். மேலும் பணம் எனக்கு மட்டும் இல்லை என்றும், மேலே உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நானும் அவரிடம் பணம் ஏற்பாடு செய்துவிட்டு உங்களை பார்க்கிறோம் என்று தெரிவித்தேன். அதற்கு அவர் பணம் ஏற்பாடு செய்து விட்டு வரும்போது தனக்கு போன்செய்து விட்டு வரும்படி கூறினார். இன்றைக்கு அவர் கேட்டவாறு பணம் ரூ 15,000/– நான் ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளேன். ஆனால் எனக்கும், எனது அண்ணன் அஜித்குமாருக்கும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பாலம்மாள் அவர்களுக்கு ரூபாய் 15,000/–ம் லஞ்சமாக கொடுத்து கூட்டு பட்டா வாங்குவதற்கு எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ 15,000/– கேட்ட தும்பல்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பாலம்பாள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு Sd xxxx (K.அரவிந்த்) 10.07.2024

Sir, Received the above computer typed report on 10.07.2024 at 06.30 Hrs. The genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.04/AC/2024 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 10.07.2024 at 07.30 hrs. Sd xxxx(R.D.Ravikumar) 10.07.2024, Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with Original computer typed report of Tr.K.Aravindh S/o Kumar @ Sivakumar, 352/1, Paraiyan Mettukadu, Jalluthupatti, Kammallapatti, Salem District is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under the Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

10.7.24

(R.D.Ravikumar)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.